உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டதேவன் மெல்லடி வாழ்க.

சிவசயிலம்

சிவசயிலநாதர் கோவில் வரலாறு

ஆசிரியர் :

திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள்,
அமைச்சர், சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கம்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்பள்ளிக்கூடம், சங்கரன்கோவில்.

பார்வையாளர் :

செந்தமிழ்ப் புரவலர், இராவ் பகதூர்,
திருவாளர் கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார்
பி. ஏ., பி. எல்., அவர்கள்,
ஆணையாளர், இந்து அறநிலையக் காப்புக்கழகம்,
சென்னை.

வெளியிடுவோர் :

திருவாளர் வ. நெல்லைநாயக முதலியாரவர்கள்,
அமைச்சர், சிவசயிலம் குடமுழுக்குக்கழகம், சிவசயிலம்.
ஷெ கழகத்துக்காக

1944

முன்னுரை.

இந்நூல் வெளியிடுவதற்கு முதற்காரணமாக இருந்தவர்கள் இப்போது நடைபெற இருக்கும் திருக்குடமுழுக்கு விழாக் கழகத் தலைவராகிய உயர்திருவாளர் சத்திதாசன் அவர்களும் அமைச்சராகிய திருவாளர் வ. நெல்லைநாயக முதலியாரவர்களும் ஆவர். எமக்கு வேண்டுவன செய்துதவிய இவர்களுக்கும் விழாக் கழகத்தாருக்கும், விழாத் துணைத் தலைவரும் ஆட்சித் தருமகருத்தருமாகிய திருவாளர் இராசாகி முத்தையா ஐயரவர்களுக்கும் மற்றைய தருமகருத்தர்களுக்கும், இந்நூலைப் பார்வையிட்டுத் தந்த சென்னை இந்து அறநிலையக் காப்புக்கழக ஆணையாளர் செந்தமிழ்ப் புரவலர் இராவ்பகதூர் திருவாளர் கோ. ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்களுக்கும் எமது நன்றியை உரிமையாக்குகின்றோம்.

தி. மு. சுப்பிரமணியபிள்ளை

12—4—1944.

உ
திருச்சிற்றம்பலம்
மெய்கண்ட தேவன் மெல்லடி வாழ்க

சிவசயிலம்

சிவசயிலநாதர் திருக்கோவில் வரலாறு

காப்பு

சீரார் சிவசயிலச் செம்மேனிப் பெம்மானும்
தாரார் கலியாணித் தாயாரோ—டேரார
வாழும் வரலாறு வாய்குளிர யாமுரைப்போம்
சூழும் வினைபோம் துணிந்து.

க. இட அமைப்பு

கோவிலிருக்கும் இடம், சில்லா, தாலூகா முதலியன

"பாண்டிநாடே பழம்பதி" என்றார் மாணிக்கவாசகப் பெருமானார். கதிரவனிடத்திலிருந்து தெறித்து வந்த தீப் பிழம்பாகிய பூமி குளிரத்தொடங்கி முதன்முதலாக உயிர்ப் பிராணிகள் உண்டாவதற்குத் தகுந்த நிலைமையை அடைந்த இடம்தான் பாண்டியநாடு என்பது உலகப் பெரிய ஆராய்ச்சியாளர் கண்ட முடிவு. அவர்கள் கன்னியாகுமரிக்குத் தெற்கே மிகப்பரந்த கண்டம் ஒன்று இருந்து அது கடலுள் மூழ்கிவிட்டது, அது இலெமூரியா என்று கூறுகின்றார்கள். இலெமூரியா என்ற மேலைநாட்டுச்சொல்லின் பொருள் கடலுள் மூழ்கிய இடம் என்பது. சிலப்பதிகாரம் முதலிய பண்டைத் தமிழ் நூல்களுட் காணப்பெறும் தலைச் சங்கமிருந்த தென் மதுரை மூதூரும், இடைச்சங்கமிருந்த

கபாடபுரமும், குமரியாறும் குமரிக்கோடும் என்பன இருந்தது அக்கண்டத்திலேதான். அக்கண்டம்தான் தமிழகம் எனப்பெறும். தமிழகத்திலேதான் முதன்முதல் மனித இனம் தோன்றியது. அதனால் மேலைநாட்டுப்புலவர் "தமிழகமே மனிதர் தொட்டில்" என்று புகழ்ந்துபோற்றுவாராயினர்.

தமிழகம் கடலுள் முழுகியபோதுதான் இமையமலையும் அதற்கு வடக்கேயுள்ள சீனமும் கடலுளிருந்து மேலே கிளம்பின. இமையமலையின் உச்சியில் இன்றும் கடல்வாழ் பிராணிகளின் உடற்கூடுகள் இருப்பது கண்கூடு. மலைநூலாராய்ச்சியாளர் இப்போதுள்ள மலைகளிலெல்லாம் முதன் முதலாகத்தோன்றிய பெருமையைப் பொதிகை மலைக்குத் தருகின்றனர். இம்மலைத்தொடர் மூழ்கிப்போன தமிழகத்தின் வடபகுதியில் இருப்பது. இதனால் உலகத்தாயகம் தமிழகம் என்பதும், அதிலே தான் முதல் மனிதர் தோன்றினர் என்பதும் நிலைபெறுகின்றன. ஆதலினாலே உலகத்தில் இன்று காணப்பெறும் மக்கள் இனம் எல்லாம் அம்முதல் மனிதரிடமிருந்து தோன்றிப் பெருகியவை என்ற உண்மை தெளிவாகும்.

தமிழகத்திலே தோன்றிய முதல் மனிதர் பேசிய மொழி தமிழ்மொழி, அதுவே இயற்கைமொழி, உலகிற் பரந்த மக்களினம் அங்கங்குள்ள வெப்பதட்ப நிலைக்கேற்ப அதனைப் பலவாறு திரித்து வழங்குவதாயிற்று; ஆதலினாலே உலகத் தாய்மொழியாவது நமது தெய்வத் தமிழ் மொழியே என்ற சிறந்தஉண்மை மலைமேலே ஏற்றிய விளக்குப்போல விளங்குகின்றது.

பண்டைநாடு பாண்டிநாடு; பண்டையர் பாண்டியர், பாண்டிநாட்டின் பிற்காலத் தலைநகரம் மதுரை; திருநெல்வேலியும் பாண்டி முதன்மை நகரம். 1911-க்கு முன்பு மதுரையைத் தலைநகரமாகக் கொண்டிருந்த மதுரைச் சில்லாவும், திருநெல்வேலியைத் தலைநகரமாகக் கொண்டிருந்த திருநெல்வேலிச் சில்லாவும் பாண்டி நாடாம். இவ்விரண்டு சில்லாக்களும் 1911-ல் மூன்று சில்லாக்களாக்கப் பெற்றன. அதுமுதற் பாண்டிநாடு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய சில்லாக்களுள் அடங்கிய தென்னிந்தியப்பகுதியால் அறியப் பெறுகின்றது. இதனுள்ளே செந்தமிழ் வழங்கும் பகுதி திருநெல்வேலிதான். கூத்துடைக் கடவுள் விரும்பித் திருக்கூத்தாடும் திருப்பதிகள் ஐந்து; அவை தம்முள் அரதன அம்பலமாகிய திருவாலங்காடு சென்னைக்கு வடமேற்கில் இருப்பது. பொன்னம்பலம் சிதம்பரம்; வெள்ளியம்பலம் மதுரை; செப்பு அம்பலம் திருநெல்வேலி; சித்திர அம்பலம் திருக்குற்றாலம் இதனால் இவ் ஐந்தில் மூன்றையுடையது பாண்டிநாடென்பதும், அம்மூன்றிலும் இரண்டினை உடையது திருநெல்வேலி என்பதும் யாவரும் அறிந்த உண்மைகள்.

இங்ஙனமாகப் புகழ்பெற்ற திருநெல்வேலிச் சில்லாவின் அம்பாசமுத்திரம் தாலூகாவைச் சேர்ந்தது நமது சிவசயிலம். சயிலம் என்பது மலை; உயரிய மரங்களும் முட்புதர்களும் அடர்ந்து வளர்ந்தோங்கி எறித்தாண்ட எண்ணுபவர் உள்ளத்தை மலைக்கச் செய்வதனாலே மலை என்ற பெயர் வந்தது. அசையம் அதாவது அசையமாட்டோம் என்ற சொல்லே சையம் எனவும் அசைவு இலம் என்ற சொற்றொடரே சயிலம், சைலம் எனவும் நின்று மலையை உணர்த்துகின்றன.

"அளக்கலாகா அளவும் பொருளும்
துளக்கலாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே"

என்பது பவணந்தியார் நன்னூற் சூத்திரம். துளக்கலாகா நிலை என்பது அசைக்கப்படாத தன்மை.

போக்கு வரவு

சிவசயிலம் பாவநாசத்திலிருந்து மேற்கே நான்கு மைல் தூரத்திலும் திருக்குற்றாலத்திலிருந்து தென்கிழக்கே பத்துமைல் தூரத்திலும் இருக்கிறது. இதற்கு ஒன்றரை மைல் கிழக்கே ஆழ்வார்குறிச்சி இரயிலடி உளது; அதிலிருந்து வடக்கே ஒன்றரை மைல் தூரத்தில் ஊர் இருக்கிறது; இரயில் வழியாகத் திருநெல்வேலியிலிருந்து ஆழ்வார்குறிச்சி இரயிலடி இருபத்தேழு கல்; தென்காசியிலிருந்து பதினாறு கல். வண்டிப்பாதை வழியாகத் திருநெல்வேலியிலிருந்து ஆழ்வார்குறிச்சி ஊருக்கு இருபத்து நான்கு கல்; தென்காசியிலிருந்து பதினான்கு கல். இங்கிருந்து கிழக்கே அம்பாசமுத்திரம் எட்டுக் கல். ஆழ்வார்குறிச்சி வழியாக வாடகை மோட்டார் வண்டிகள் திருநெல்வேலிக்கும் தென்காசிக்கும் அடிக்கடி ஓடுகின்றன. இங்கிருந்து சிவசயிலத்தின் வழியாக ஒரு காட்டுப்பாதை மலைமேலுள்ள கணவாயைப்பற்றிக் காட்டுப்புளி என்ற ஊரைச்சேருகிறது. தென்காசி, செங்கோட்டையிலிருந்து திருவனந்தபுரம் போகிற வண்டிச்சாலை காட்டுப்புளி வழியாகவே போகின்றது. இச்சாலையில் வாடகை மோட்டார்களும் போகின்றன. ஆழ்வார்குறிச்சியிலிருந்து காட்டுப்புளி வரை நல்ல

சாலை போடப்பெறுமாயின் மிகச்சுருங்கிய செலவில், காலத்தில், திருவனந்தபுரம் போவது எளிதாகும். இக்காட்டுப் பாதை இன்றும் பெரும்பாதையாகவே இருந்து வருகிறது. கோவிலிலிருந்து அரைக்கல் வடமேற்கே சம்பகன் களமும் வடக்கே இரண்டுகல்லில் கோவிந்தப்பேரியும், கிழக்கே முக்காற்கல்லில் செட்டிகுளமும் உள. ஆற்றின்தென்கரை சிவசயிலம், வடகரை கலியாணிபுரம். (முன்பக்கத்தில் காட்டுப் புளி என்றிருப்பதைக் குளத்துப்பிழை என்று படிக்கவும்.)

மலை, ஆறு, குளம்

தண்பொருநையாறு பொதிகைமலையிலே தோன்றிப் பாவநாசத்தின் வழியாக அம்பாசமுத்திரம் போகிறது. அதற்கு மேற்கே நான்காவது கல்லில் வெள்ளிமலையிலே தோன்றுகிறது கருணையாறு; இது கடனையாறு என்றும் சொல்லப்பெறும். இவ்விடத்திலேதான் மேற்குத் தொடர்ச்சிமலை வடக்கே திரும்புகிறது. இந்தக் கடவிலே இருக்கிறது சிவசயிலம், இதற்கு வடக்கே முள்ளிமலை என்ற சிறுபறம்பு இருக்கிறது ஆதலினாலே மூன்று புறமும் மலையினாலே சூழப்பெற்றது சிவசயிலம். இதற்கு வடபுறம் கோவிலை அடுத்துக் கிழக்கே பார்க்க வருகிறது கருணையாறு. இதில் திடீரென்று வெள்ளம் வருவதும் வற்றுவதுமாக இருக்கும். ஆனால் எந்த அருங்கோடையிலும் மூங்கி முழுகும்படி தண்ணீர் ஓடிவரும் உயிராறு இது. இவ்வாற்றில் ஆழ்வார்குறிச்சிக்குக் கீழ்புறம் இராமநதி வந்து சேருகிறது. இராமனுறு கடயத்திற்கு வடக்கே மலையிலிருந்து கீழிறங்கி வந்து கடயத்தை ஒட்டிவரும் வராட்டாற்றுடன் இரவணசமுத்திரத்தின் அருகிலே கூடிப்பாய்கிறது. கணவாயில் மலையடிவாரத்திலிருந்து ஒன்றரை மைல் மேலே

அத்திரிகூடம் இருக்கிறது. அங்கே அத்திரி ஊற்று என்று சொல்லப்படும் அத்திரி தீர்த்தம் உள. இவ்வூரைச் சூழப் பல குளங்க ளிருக்கின்றன.

வெப்பதட்பம், மக்கள் தொகை, தங்கும் இடம்

சிவசயிலத்தைப் போலக் குடியிருப்புக்கு வசதியான இடம் எங்கும் இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். எந்தக் கோடையிலும் போக்கறாத கடனையாறும், மர மடர்ந்த சோலைகளும், சித்திரை பத்து முதல் புரட்டாசி பத்து வரை விடாமல் கணவாய் வழியாக வீசும் காற்றும் பனிநீர் தெளிப்பது போன்ற சாரலும் உடலையும் உள்ளத்தையும் குளிரச் செய்து பூரிக்கச் செய்கின்றன. 1941-ல் எடுத்த கணக்குப்படி சிவசயிலத்திலுள்ள வீடுகள் நூற்று முப்பது. ஆண் 290 + பெண் 311 = ஆக மொத்தம் மக்கள் தொகை அறுநூற்று ஒன்று. ஆழ்வார்குறிச்சியின் வீடுகள் 1399 ஆண் 2409 + பெண் 2835 = ஆக மக்கள் தொகை 5244.

தருமபுரம் திருமடம் மிகப்பெரியதாக இருக்கிறது. பழைய காலத்தில் இதில் நாடோறும் ஐந்நூறு பேர் உண்டு வந்தனர் கோவிலும் மிகப் பெரிய கோவில். அதன் முன் வசந்தமண்டபமொன்று விளங்குகின்றது. இவ்வூருக்கு அஞ்சல் நிலையம் ஆழ்வார்குறிச்சி. ஆற்றுக்கு வடகரையிலுள்ள கலியாணிபுரத்தில் ஓர் ஆரம்பப்பள்ளி இருக்கிறது. இங்கே காட்டிலாகாவின் வழிப்போக்கர் விடுதி Traveller's Bungalow) ஒன்று உள்ளது.

உ. கோவில்

கோவிலின் தோற்றம், அகல நீளம்

கடனையாற்றின் தென்கரையில் மேற்கே பார்க்கப் பேர ழகுடைய திருக்கோபுரத்துடன் திகழ்கின்றது சிவசயில நாதர் திருக்கோவில். இதன் அகல நீளம் படத்திற்காண்க.

கோவிலின் பலபகுதிகள், சுற்றுக்கள், மூர்த்திகள், மண்டபங்கள்

கோவிலின் தலைப்பிற் பந்தல் மண்டபம் மிகப் பெரிய தாக இருக்கிறது. அதன் வழியாகக் கிழக்கே சென்றால் குடைவருவாயில் என்று சொல்லப்பெறும் திருக்கோபுர வாயில் உளது. கோவில் மிகப்பெரியதாக எல்லாப் பக்கங் களிலும் தட்டோட்டியால் மூடப்பெற்று உள்ளே ஒருவரும் நுழைய முடியாதபடி வானவெளியே இல்லாமல் அமைந் திருக்கிறது. இது காட்டுக்கோவிலானபடியால் இரவில் வனவிலங்குகளோ அவை போன்ற கள்வரோ உள்ளே நுழைய முடியாதபடி இங்ஙனம் காப்புச் செய்யப்பெற்றது போலும். கோபுரவாயிலின் தென்புறம் தட்டோட்டிக்குப் போகும் வாசல் இருக்கிறது. அதற்கு ஒரு கனமான பலத்த இரும்புக் கதவுள்ளது.

கோபுரம் ஐந்து தட்டுக்களோடு கூடியது; அதன் தென்புறம் வடக்கே பார்த்திருக்கும் அதிகார நந்தியை வணங்கி ஆணைபெற்றுக்கொண்டு உள்ளே நுழைந்து தென் புறம் கிழக்கே பார்க்க இருக்கும் பிள்ளையாரையும் நெல்வேலி

நாதரையும் பணிந்து திருமுன்பு வந்தால் பலிபீடத்தையும் நந்தியையும் கொடிமரத்தையும் காணலாம். நந்தியின் அழகு கண்கவரும் பெருமையது; முழுக்காப்புடன் விளங்கும்போது அழகிய காளையொன்று படுத்திருப்பது போலவே காணப்பெறும். நந்திக்கு அடிக்கடி திருமுழுக்கும் முழுக்காப்பும் செய்யப்பெறும் இடங்களில் இதுவே முதன்மையானது.

கொடிமர மண்டபத்தைத் தாண்டி மணிமண்டபத்தில் ஏறி மாமண்டபத்திற் சென்று அங்குள்ள சிறு நந்தியின் பக்கலில் நின்று கருப்பக் கிரகத்தில் சடைமுடியோடு கூடிய சடையப்பரை, சிவசயிலநாதரை, கண்குளிரக் கண்டு வணங்கித் திருவருள்பாலிக்கும்படி போற்றிசைப்போம். சிவலிங்கப்பெருமான் தானாகே முளைத்தெழுந்த பரம்பொருள். உளி படாத திருமேனி, பின்னாலே சடைமுடித்தது போலும் காட்சி. அர்த்தமண்டபத்தில் பள்ளியறைச் சொக்கர் இருக்கிறார். இரவு தோறும் பள்ளியறைக்குப் போதலினாலே பள்ளியறைச் சொக்கரென்பது; இது பெருமானுடைய திருவடிகளே. பெருமான் நம்மைப் போலவே உருவத்துடன் பள்ளியறைக்குப் போவதில்லை என்பதை நாம் அறிதல் வேண்டும். அவருடைய திருவடிகளே பள்ளியறைக்குச் செல்லுகின்றன என்றால் அதன் கருத்தென்னை? அம்மை பெருமானின் திருவருட்சத்தி. பெருமானின் திருவருட்சத்தியாகிய அம்மையைத் துணைக்கொண்டு பெருமானுடைய திருவடிகளை நாம் நமது நெஞ்சமாகிய பள்ளியறையிலே எழுந்தருளச்செய்து பணிவோமாயின் நாம் மனித உடலெடுத்ததனால் ஆகிய பயனைப் பெற்றவராவோம். நம்மை

நல்வினை தீவினை என்னும் இருவினையும் சேரா; நாம் உலகப் பாசத்திலிருந்து விடுபட்டு ஆணவம் அற்று இறைவர் திருவடியாகிய பேரின்ப நிழலிலே புகுந்து இன்பம் நிளைந்திருப்போம்.

மாமண்டபத்தில் நடுவே ஒரு தடையளி போடப் பெற்றிருக்கிறது. இது மேற்கேயிருந்து மிகுதியாக வீசும் காற்றைத் தடுத்து உள்ளேயுள்ள விளக்குகள் ஆடாமலிருக்கும்படி செய்வதற்காகவே போடப்பெற்றது. வடபுறம் பிள்ளையார் இருக்கிறார். அவருக்குப் பின்புறம் கல்லில் எழுத்துக்கள் தலை கீழாக உள்ளன. இதனால் அக்கல் முன் திருப்பணிக் காலத்தில் தலைமாற்றி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. தென்புறம் சந்திரசேகரரும் அம்மையும் எழுந்தருளியுள்ளர். வடபுறம் கூத்தப்பெருமான் சிவகாமியம்மையோடு காரைக்காலம்மை வணங்கிப்பாடத் தென்முகமாகக் காட்சிதருகின்றார். மாமண்டபத் தூண்களிலெல்லாம் தலையிலே சிங்க உருவங்கள் அமைந்துள்ளன.

மகாமண்டபத்தைக் கடந்து வடமேற்கிலுள்ள முருகப்பெருமானைப் பணிந்து வடக்கு உட்சுற்றில் வருவோம். ஆற்றுக்குப் போகும் வாயில் திருமதிலின் நடுப் பகுதியில் இருக்கிறது. அர்த்த மண்டபத்தை அடுத்திருக்கும் சண்டேசுரரைப் பணிந்து சிவ வழிபாட்டுப் பலனை வேண்டிப்பெறுவோம். வடக்குத் திருமதிலை ஒட்டிக் கிழக்குப்பகுதியில் வரிசையாக சனியும், அன்னபூரணியும் திருமகளும், சுரதேவரும், துர்க்கையும், வயிரவரும் உள்ளர்.

கிழக்குஉட்சுற்றில் ஞாயிறும் விசுவநாதர் விசாலாட்சிகண்ண பிரானும் வெண்மதியும் கண்டு பெருமான் கருப்பக் கிரகத்தின் தென்புறம் தெற்கணுமூர்த்தியைக் கும்பிடு வோம். சடையப்பரை வெளியிலிருந்து கண்டு பணியக் கருப்பக்கிரகத்தின் வடபுறமும், கீழ்புறமும், தென்புறமும் சன்னல்கள் உள. தென்கிழக்கு மூலையிலே திருமடைப்பள்ளி காணப்பெறுகிறது. தெற்குச் சுற்றில் அறுபத்துமூன்று நாயன்மார்களேயும் வணங்கி அருள்பெற்று அம்மைகோவிலி னுள்ளே புகுவோம்.

கருப்பக்கிரகத்தில் அம்மை பரமகலியாணித்தாய் நான்கு திருக்கரங்களுடன் காண்பவர் கண்குளிர் காட்சி தருகின்றார். அர்த்தமண்டபத்தில் பள்ளியறையம்மை இருக் கின்றாள்; அம்மையைப் பீடத்தில் படுத்த திருக்கோலத் துடன் காண்கின்றோம். மண்டபக்கழுத்தில் நந்தியும், மா மண்டபத்தின் வடபுறம் பிள்ளையாரும் இருக்கின்றனர். அதில் வடபுறமாகக் கருவேலம் உள்ளது. மணிமண்டபம் தாண்டி வந்தால் திருப்பள்ளியறை தெற்கே பார்க்க இருக் கிறது. அம்மை திருமுன்புள்ள பெரிய மண்டபமே திருமணமண்டபம். இதனைக் கொடிமர மண்டபத்தோடு பிணைக்க அழகான சங்கிலி மண்டபம் உள்ளது.

சேவந்தியப்பர் கோவில்

இது ஆழ்வார்குறிச்சியிலிருந்து சிவசயிலம் வரும் வழி யிலே மேற்கே அரைக்கல்லில் இருக்கிறது. இக்கோவிலும் மேற்கேபார்த்ததுதான். செவந்தியப்பர் கோவிலில் கருப்பக் கிரகமும் அர்த்தமண்டபமும் மாமண்டபமும்இருக்கின்றன. தென் கிழக்கில் மடைப்பள்ளியும் மேற்கே முன் மண்டப

மும் குடைவருவாசலும் உள. அவைகளுக்கு முன்னால் திருவிழாப் பந்தலும் நடுவே அனுப்புமண்டபமும் காணப் பெறுகின்றன. அவைகளுக்கு முன்னால் சிறிது மேற்கே தள்ளித் தேரோடும் தெரு இருக்கிறது. வடமேற்குப் பக்கத்தில் குளத்தூர் ஐயனார் கோவிலும் அதையொட்டித் தெருவடியிற் பெருமான் திருத்தேரும் உள்ளன. சிறிது தெற்கே தள்ளி அம்மை திருத்தேர் நிற்கிறது. வடகிழக்கில் இருப்பது ஈசான பலி பீடம்.

இங்கேதான் சிவசயிலநாதர் ஆண்டுதோறும் பங்குனி மாதக் கடைசியிலே தொடங்கும் சித்திரை விசுத் திருவிழாவில் எழுந்தருளி வந்திருந்து திருவீதி உலா வந்து திருத்தேர்க்காட்சி தந்தருளுகின்றார்.

அத்திரிகூடம்

மலை மேலே அத்திரிகூடத்தில் உள்ள சிவலிங்கப் பெருமான் திருக்கோவில் இப்போது உடைந்து கிலமாக இருக்கிறது. இது கிழக்கே பார்த்த கோவில். இது செம்மை செய்யப் பெறுதல் வேண்டும்.

காலம், முழுக்கு, தீர்த்தம், தலமரம்

திருவனந்தல், காலசந்தி, உச்சிக்காலம், மாலைப்பூசை, அர்த்தயாமம் ஆகிய ஐந்து காலங்களிற் பூசனை நடைபெறுகிறது. திருவனந்தல் தவிரப் பிறநான்கு காலங்களிலும் திருமுழுக்கு உண்டு. கோவிலின் வடபுறம் ஆற்றங்கரையில் தீர்த்தவாரி மண்டபம் இருக்கிறது. இது தருமபுரத்தைச் சேர்ந்தது. பழுதடைந்திருந்த அதை இப்போது ஊரார் நானூறு ஐந்நூறு ரூபாய் வரை செலவு செய்து பழுது

பார்த்திருக்கிறார்கள். கடனையாறுதான் இங்கே தீர்த்தம். கடப்பமரக் காட்டிடையே முளைத்த பெருமான் ஆதலாலே தலமரம் கடம்பு.

௩. சுற்றுக் கோவில்

இதன் சுற்றுக்கோவில்கள் பின் வருவன. ஆழ்வார் குறிச்சியிலுள்ள 1. செவந்தியப்பர் கோவில், 2. குளத்தூர் ஐயனார் 3. கலியாணிபுரத்திலுள்ளது செல்வியாரம்மன் 4. மலைமேலுள்ள கம்படையார் சாத்தனார்.

௪. சிற்பச் சிறப்புகள்

நிறங்கள், தூண்கள்

மண்டபங்களிலுள்ள தூண்களிலெல்லாம் சிங்கங்கள் அமைந்து முகட்டைத் தாங்குகின்றன. மண்டபங்களின் வேலைப்பாடு காட்டும் பேரழகினது பந்தல் மண்டபத்தின் முகட்டில் உட்பக்கம் பலநிறப் பூக்கள் தீட்டப் பெற்றுள.

கோபுரம், தேர், விமானம், வாகனம்

இரண்டு மரத்தேர்கள் இருக்கின்றன. பெரியது பெருமானது; சிறியது அம்மையது. பெருமான், பெருமாட்டி கருப்பக் கிரகங்களின் மேலே நல்ல வேலைப்பாடுள்ள விமானங்கள் உயரத் தங்கமுலாம் பூசப்பெற்றுக் கண்கவர் வனப்பின. அரசகோபுரம் ஐந்து தட்டுக்களை உடையதாகிப் பல சித்திரப் பதுமைகளோடு காணப்படுகிறது. இக்கோவிலிலுள்ள வாகனங்கள் பின் வருவன:—

கற்பகமரம், கமலவாகனம், பூதம், சிங்கம், இடபங்கள் நான்கு, சப்பரங்கள், பூம்பல்லக்கு, கைலாசமலை, கிளி, அம்பலவாணர் சப்பரம் முதலியன.

ரு. ஆட்சி.

சென்னை, இந்து அறநிலையக் காப்புக் கழகத்தால் நியமிக்கப்பெறும் மூன்று தருமகருத்தர்களுடைய ஆட்சியில் இக்கோவில் இருந்துவருகிறது. அவர்களுள் ஒருவர் ஆட்சித் தருமகருத்தர்.

சா. வரவு செலவு.

வரவு

இக்கோவிலுக்கு அரசர் கொடை ௹ 909—6—8. ஆழ்வார்குறிச்சியிலுள்ள தென்கால் வடகாலிலும் சிவசயிலம் அரசப்பத்திலும் ஆம்பூரிலுமாக நான்கு கோட்டை விதைப்பாடு நஞ்சைநிலம் உண்டு. இதன் வருவாய் ஐம்பது கோட்டை நெல். இக்கால விலைப்படி இந்நெல்வழி வரவு ௹ 1000. ரூபாய் ஐம்பதற்கு அடைபடும் தோப்பு ஒன்றுளது.

பண்டைக் காலத்தில் அரசப்பத்து, குறுவைப்பத்து முதலிய பல விரிந்த நிலப்பரப்புகள் இருந்தன என்பது சிவசயிலப்பள்ளு முதலிய இலக்கியங்களால் தெரியவருகிறது. அவைகள் நாளடைவில் கைமாறின. கோவிலுக்கு முன்புள்ள அரசப்பத்து குறுவைப் பத்தில் குடியானவர்கள் சில ஆண்டுகளின் முன்புவரை கோட்டைக்கு இவ்வளவென்று கோவிலுக்கு நெல் அளந்து வந்திருக்கிறார்கள். இன்று இவ்

விடங்களில் வளரும் பயிர்கள் அளவின்படிக்கு மிக மேலாகவே காணும்போல வளரினும் பயன் தருவது அரைமேனியாகவே இருக்கிறது. இதன் காரணம் குடியானவர் கோவிலை மறந்தமைதான் என்று அறிந்த பெரியார்கள் கூறுகின்றனர்.

செலவு

திருவிழா எழுநூற்றைம்பது ரூபாய்வரை செலவில் நடைபெறுகிறது. இதில் கோவிலார் தரும் ரூபாய் நூற்றைம்பது தவிர மிச்சம் ரூபாய் அறுநூறுவரை ஊரார் நன்கொடையிற் சேருகிறது.

அருச்சனை

அட்டோத்திரம், திருசதை, சகசிரநாமம் ஆகிய அருச்சனைகள் முறையே ஓரணு, இரண்டணு, நான்கணுக் கட்டணம் பெற்றுச் செய்யப்பெறுகின்றன. நந்திக்குத் திருமுழுக்குக் கட்டணம் ஐந்தணு. இவைகளில் கோவிலுக்கு வருவாய் ஒன்றுமில்லை.

ஏ. புராண வரலாறு

தலபுராணம்

சிவசயிலத் தலபுராணம் நெற்குன்றைமாநகர் வீரப்ப முதலியாரவர்களாற் பாடப்பெற்று 1910ல் அச்சேற்றப் பெற்றது. இவ்வாசிரியர் வாக்கு மிகச்சிறந்ததாகக் காணப் பெறுகிறது இவர் திருச்கருவைத் தலபுராணமும் பாடியருளியிருக்கின்றார். புராணச் சுருக்கம் பின் வருவது.

திருநாட்டுச் சிறப்பு

நாடு திருமுள்ளிநாடு.

திருநகரச் சிறப்பு

நகரம் சிவசயிலம்.

முதலாவது தல விசேடச் சருக்கம்

நைமிசாரணிய முனிவருக்குச் சூதமுனிவர் இவ்வாறு கூறுகிறார். இது பஞ்சக்குரோசமத்தி யென்று புகழப்படுகிறது.

"சிவசயில நாதருக்கும் தெசரதரா மீசுரர்க்கும்
பவம் உயிர்கட் கறமாற்றும் பரமர் வன்னியப்பருக்கும்
உவமனில்லா மலைய வெற்பில் உபைபாவ விநாசருக்கும்
குவலயத்திற் புகல்வர்பஞ்சக் குரோசமத்தி தேய
மென்றே."

இரண்டாவது தீர்த்த விசேடச் சருக்கம்

அத்திரி முனிவர் தமது மனைவி அனசூயையுடன் திரிகூட மலையில் வாழ்ந்து வரும்போது அவர் மாணாக்கர் கோரட்சகர் என்ற கோரக்கருக்காகக் கங்கையை வரவழைத்துத் தண்டத்தால் நிலத்தைக் கீண்ட இடத்தில் எழுந்த கடனா என்னும் ஆற்றினுடன் கலந்து செல்லச் செய்தார். கடனா வன்னியப்பருக்கு மேற்காகவும் சுந்தரேசருக்குத் தெற்கிலும் ஞானவாலீசருக்குக் கிழக்கிலும் பிரமதேயத்தமர் கைலாசநாதருக்கு வடக்கிலுள்ள சுவேதபுரீசருக்கு வடக்கிலுமாகச் சென்று திருப்புடைமருதுக்குத்

தென்மேற்கினை யடைந்தது. புடைமருதீசர் அதனை அங்கேயே தண்பொருனையாறு தோன்றி வருமட்டும் நிறுத்தியிருந்தார். அவ் யாறு வந்தவுடன் கடனை அதனோடு கூடிக் கடலையடைந்தது. அத்திரி பாவநாசத்தை அடைந்து பெருமானைப் பணிந்து அகத்தியரோடு அளவளாவித் திரும்பினர். தைப்பூசத்தில் கங்கை வந்த காலமாதலால் அது விழாவாயிற்று.

3-வது அத்திரிமாமுனி சுயம்புலிங்க தெரிசனச் சருக்கம்

அகத்தியருக்குப் பாவநாசத்தில் சுயம்பு லிங்க தெரிசனம் தந்தது போலத் தமக்கும் அருளவேண்டுமென அத்திரி தவம் கிடப்ப 'அருள்வோம்' என விண்வாக்குக் கிடைத்தது. மாங்கனி பறிக்கச் சென்ற கோரட்சகர் சுயம்பு லிங்கங் கண்டு தெரிவிக்க வந்து பணிந்த அத்திரிக்கு முன் பெருமான் அம்மையோடு விடையூர்து காட்சி தந்தருளினர். அத்திரி பலவாறு புகழ்ந்தார்.

4-வது அத்திரி முனிக்கு அனுக்கிரகமான சருக்கம்

அத்திரிமுனி கேட்ட வரம் பின் வருவது:—

"கோதிலாத் திரிகூட மால்வரை இன்று முதலா
ஆதியாம் சிவசயிலம்என் றகிலமும் வியந்தே
ஓதிடும்படி செய்துஎனக் குனது சேவடியில்
பேதியாதபேரன்பும் நற்புத்தியும் பெறவே.
"மற்றொரு விடையங்களில் மனது செல்லாமல்
பெற்றிடும்படிக் கருள்செய்தே எனைத்தினம் பிரியாச்
சுற்றமாகிய சீடனும் நாடோறும் தொழுதே
உற்ற சேவை செய்திட அருள் புரிந்திடாய் உரவோய்"

பெருமான் அங்ஙனமே அருள்செய்து தான் வாலீச் சரத்திலும் பிரமதேயத்திலும் இருப்பதை மொழிந்தனன். அத்திரிமுனி கோவில் கட்டி வழிபட்டார்.

5-வது பிரமதேவர் பூசித்த சருக்கம்

கற்பத் தொடக்கம் ஒன்றில் நான்முகன் படைப்புத் தொழில் மறந்து விண்மொழி கேட்டு இவ்விடம்வந்து தவம் புரியப் பெருமான் இலிங்க வடிவமாகக் காட்சிதந்து படைப்பு முறை கற்பித்தருளினன். ஆதி மலையானதால் அது நான்முகன் வேண்டுதலின்படி சிவசயிலம் எனப் பெயர் பெற்றது. நான்முகன்கோவில் கட்டிச் சித்திரை விசு விழா நடத்திப் பணிந்தான்.

6-வது பச்சிம முகமான சருக்கம்

ஒரு சமயம் பிருகு முனிவர் அம்மையைவிட்டு அப்பனை மட்டும் வலம் வந்து வணங்கினர். அது கண்டு அம்மை வருந்தி மேற்கே சென்று தவம் பண்ணினள். அப்போது பெருமான் மேற்கே திரும்பி அவளைக் "கலியாணி" என்றழைத்தார். அதனல் இங்கே பெருமான் மேற்கு முகமாக இருக்கிறர். அம்மை கலியாணி என்று பெயர் பெற்றுள்.

7-வது தேவி இடப் பாகம் பெற்ற சருக்கம்

கங்கையை ஐயன் அனுப்பியும் தேருமைகண்டு அனசூயையை அனுப்ப அனசூயை அம்மையைப் பணிய அத்திரியும் வந்து பணிந்தார். அம்மை இடப்பாகம் பெற வேண்டுமென, அத்திரி, "புரட்டாதி மாதம் வளர்பிறை அட்டமி தொடங்கி இருபத்தொரு நாள் கேதார விரத"

மிருக்கச் சொன்னார். அம்மை அத்திரியையும் அனசூயை யையும் தாய் தந்தை முறைகொண்டு அவ்விரதமிருந்து பெருமானது இடப்பாகம் பெற்றாள்.

8-வது சுதேரிசன பாண்டியன் வேள்விச் சருக்கம்

மணலூர்ச் சுதெரிசன பாண்டியன் பிள்ளையில்லாமல் தண்பொருநைக் கரையிலே பரிவேள்வி செய்தான். அவன் குதிரை நாடு சுற்றிவரும்போது சிவசயிலம் அணுக, சயிலபதி முருகனை ஏவினான். முருகன் குதிரையைக் கட்டிச் சேனை யைக்கொன்று அதுதெரிந்து வந்த பாண்டியனையும் வேலால் அடித்தான். பாண்டியன் மயக்கந்தெளிந்து முன்னே கோவில் கண்டு கடனையில் மூழ்கிச் சிவசயிலநாதனைப்பணிந்து போற்றிசைப்ப விடைமேல்நின்று அருளினன் பெருமான்.

9-வது சுதேரிசன பாண்டியனுக் கனுக்கிரகமான சருக்கம்

பாண்டியன் "பேரன்பு அருள்செய்தலாலே இவ்வூர் அன்பூர் எனப்படுதல் வேண்டும். என்னோடு முருகன் போரிட்ட இடம் குமரவேள் களம் என்று பெயர் பெறுக" என வேண்டினான். சிவனு ரருளாலும் முருக னருளாலும் பாண்டியன் பரிவேள்வி முற்றிக் குமரபாண்டியனைப்பெற்று, திருநேல்வேலிக்குக்கிழக்கே முருகன்கோவில் கட்டி முருகன் குறிச்சி எனப் பெயர் அமைத்து அருள்பெற்றான். அவன் அரசை மகனுக்குக் கொடுத்து அன்பூர் வந்து திருப்பணி செய்து கடனையில் அணைகட்டி அரசப்பத்து முதலிய திருத் திய நிலங்களைக் கடவுளுக்காக்கி வீடுபெற்றான்.

10-வது இரேத நாயகர் பூசித்த சருக்கம்

தன் நாட்டில் ஒரு பார்ப்பனப்பிள்ளை இறந்தமைகண்டு தெற்கேவந்து சிவசயிலத்துக்கு வடக்கே பஞ்சாக்கினி நடுவே

தவம் செய்திருந்த சம்பகனைக்கொன்று பார்ப்பனப்பிள்ளையைப் பிழைப்பித்தான். தவசியைக்கொன்ற பாவம் இராமனைப் பற்றியது. உடன் இராமன்

"தவந் தனைச் சிதைத்தனம் தவசி யாருயிர்
கவர்ந்தனம் இப்பவம் களைந்து நீக்கிட
நவந்தரு மூவுல குக்கு நாதனும்
சிவன்றனை யன்றிஓர் செயலும் இல்லையால்"

எனத்துணிந்து சிவக்குறியை நிலைபெறுத்தித் தன் பெயரால் ஒரு தடமும் உண்டாக்கினன். அவ்விடம் இராமனீச்சரம் எனவும் தடம் இராமநதி என்றும் சம்பகன் இறந்த இடம் சம்பகன்களம் எனவும் பெயர் பெற்றன.

வன்னியப்பர் வரலாறு கூறுவோம். வன்னி என்பது தீ. திக்கடவுள் ஏழு தேவகன்னியர் மீது காமம் கொண்டான். முனிவர்கள் அவன் அழகு கெட்டொழியச் சபித்தார்கள். வன்னி சிவசயிலத்தின் கிழக்கில் வந்து வன்னி தீர்த்த மொன்று வகுத்து கடனையின் கிழக்கில் வன்னீச்சரம் என்னும் கோவிலைக் கட்டிப் பேறுபெற்றான். அப்பெருமானே வன்னியப்பர்.

11-வது அகத்தியர் பூசித்த சருக்கம்

பார்வதி திருமணத்தின்போது உயர்ந்த தென் திசையைச் சமனுக்க அகத்தியர் பெருமானருளால் சிவசயிலம் வந்து அத்திரியுடனே சயிலப்பரைக் கும்பிட்டுப் பாவநாசம் சென்று அங்கே சுயம்புலிங்கம் கண்டு போற்றிக் கோவில்

கட்டிப் பூசித்தார். சித்திரை விசுவில் பெருமான் அவருக்குத் தனது திருமணக் கோலங் காட்சி யருளினன்.

திருவிழாக்கள்:—

சித்திரை விசுவில் தீர்த்தவாரி பன்னிரண்டாம் நாள்; பதினோராம் நாள் திருத்தேர்; இது பங்குனிப்பெருவிழா. ஐப்பசியில் திருமண விழாவும், திருவாதிரையன்று கூத்தர் காட்சியும் நடைபெறுகின்றன.

அ. சரித்திர வரலாறு.

கல்வெட்டுக்கள்:—

பெருமானுடைய மணிமண்டபம் வடபுறச் சுவரிலும் கோபுர வாயிலின் வடபுறத்திலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஆழ்வார்குறிச்சியில் ஆவுடையம்மன் கோவிலில் கொல்லம் ஆண்டு 568 (சகம் 1315)ல் ஒரு கல்வெட்டும், 725ல் ஒரு கல்வெட்டும், 736ல் ஒன்றும் எழுதப் பெற்றிருக்கின்றன. மூதற் கல்வெட்டில் இக்கோவில் நரசிங்க ஈசுவரமுடையார் கோவில் என்பதும், இரண்டாம் கல்வெட்டில் இராமப்ப நாயகரய்யன் செட்டிக்குளம் என்ற ஊரைத் தானம் செய்ததும், மூன்றும்கல்வெட்டில் விசுவநாதநாயகன் (1559-1563) தானம் செய்தான் என்பதும் குறிப்பிடப்பெற்றுள்ளன. கோனேரின்மைகொண்டான் ஆறும் ஆண்டில் எழுதிய மற்றொரு கல்வெட்டு பெருமானின் பெயர் நரசிங்கேசுவரன் என்பதும் ஊரின்பெயர் கொல்லம்கொண்ட பாண்டிய சதுர்வேதிமங்கலம் என்பதும் கூறுகின்றது. ஆழ்வார் குறிச்சி ம்ன்னியப்பர் கோவிலிலுள்ள கல்வெட்டு ஒன்று

பெருமானின்பெயர் திருவன்னீசுரமுடையார் என்றும் அது உள்ளஇடம் முள்ளிநாட்டு இராசராசசதுர்வேதிமங்கலத்துக் காடேறு எனவும் கூறுகின்றது. மற்றொரு கல்வெட்டு வன்னி தீர்த்தக் கரையில் உள்ள திருவன்னீசருக்கு முத்து வீரப்பநாயகர் கொல்லம் 787 (சகம் 1532)ல் நிலதானம் செய்ததைக் காட்டுகின்றது.

சிவசயிலத்துக் கோவிலில் உள்ள 1916ல் எடுத்த எண் 520-வது கல்வெட்டு சகம் 1509 (கொல்லம் 763)ல் கட தீர்த்தக் கரையில் இரசதகிரி (வெள்ளிமலை)க் கருகில் சிவ சயிலநாதபுரத்தில் சிவசயிலமுடைய தம்பிரானர் கோவிற் கரைக்கு திருவிலாஞ்சனை முதலிய பணிவிடைகள் உமை யொருபாக முதலியார் பண்டாரத்துச் சீடர் ஆண்டுகொண்ட நயினர் செய்யும்படி நியமிக்கப்பட்ட செய்தியைக் கூறுகின் றது. எண் 521-வது கல்வெட்டு கொல்லம் 823ல் இராமப் பய்யன் காலத்தில் ஒழுங்காகப் பரதேசிகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது நின்றுபோக, சொக்கலிங்க நாயகன் அதனை மீண்டும் கொடுக்க ஆணையிட்டதைக் குறிக்கிறது.

மேல் ஆம்பூர், பூங்குறிச்சிக் குளக்கரையில் 1916-ல் எடுத்த 519-வது எண் கல் வெட்டு சகம் 1560 (கொல்லம் 813)ல் சிவசயிலநாதப் பெருமானுக்காக ஆம்பூர், ஆழ்வார் குறிச்சி, கிட்டிணபுரம், கடையம் முதலிய ஊர்களைச் சேர்ந்த நாட்டவர் சில வரிகளைக் கொடுக்கும்படி தானம் செய்யப்பட்டதைக் கூறுகிறது. கீழ் ஆம்பூரில் 1916ல் எடுத்த 518வது எண் கல்வெட்டு வட்டெழுத்தில் வேணாட் டரசன் இரவிவர்மனைக் குறித்துள்ள ஒரு செய்யுளாக இருக்கிறது.

பஞ்சக் குரோச மத்தி சிவசயிலம். குரோசம் என்பது இரண்டாயிரம் தண்டம்; அதாவது இரண்டே கால் மைல் தூரம். பாவநாசத்திலிருந்து கடையம் வரை பதினொன்றே கால் மைல் தூரம்; இதன் நடுவே இருத்தலினாலே சிவசயிலம் பஞ்சக் குரோச மத்தியாகும். பாவநாசம் சூரியகலை, திருக்குற்றாலம் சந்திரகலை, சிவசயிலம் சுழிமுனை அதாவது அக்கினிகலை. பாவநாசம் யோகபீடம், திருக்குற்றாலம் போக பீடம், சிவசயிலம் ஞானபீடம். சிவசயிலத்தில் ஞானக்காற்று வீசுகின்றது. இவ்வுண்மையினாலே சிவசயிலம் தருமபுரம் திருமடத்தின் சின்னப்பட்டத்திற்கு இருப்பிடமாகப் பன்னெடுங்காலம் விளங்கியிருந்தது. சடையப்பராகிய சிவசயிலப்பருக்கு அன்புமபூண்டமையினாலேயே தருமபுரத்தாருக்குச் சடைமுடி திகழுவதாயிற்று. தருமபுரத்தார் இக்கோவிலைத் தமது சொந்தக் கோவிலாகவே போற்றிவந்தனர். அண்மைக்காலம்வரை பின்வரும் தருமங்கள் நடந்துவந்தமை தக்கார்வழி அறிகின்றோம் :— பிள்ளையார் சதுர்த்தி, நவராத்திரி முதல்நாள், திருமணத்தவசும் ஊஞ்சல் மூன்று நாளும், கார்த்திகைத் தலைச்சோமவாரம், மார்கழித் திருப்பள்ளியெழுச்சி முப்பது நாளும், திருவாதிரையன்று முழுவதும், தைப்பொங்கல், மாசிவராத்திரி முதற்காலம், இவைகளும் அமாவாசைதோறும் திருவிழா நாயகருக்குப் பழக்காப்பும், வெள்ளி, திங்கடோறும் சகசிரநாமாருச்சனையும். அர்த்தயாமக்கட்டளை (நாடோறும் ஒன்றேகாற்படி யரிசி மிளகுசம்பா அரைப்படி எண்ணெய், விளக்குக்கு அரைப் படி எண்ணெய்ச் செலவில்).

இப்போது இம்மடத்திற்குச் சிவசயிலம் அரசப்பத்தில் ரூ 3100-ம் குருந்துடையார்குளத்தில் ரூ 6000-ம், வேப்பங்குளத்தில் ரூ 2635-ம், ஆழ்வார்குறிச்சியில் ரூ 2000-ம் ஆக ரூபாய் பதின்மூவாயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து குத்தகை வருவாய் வருகிறது. இதுபோல இதற்குச் சம்மந்தமான அன்னதானத்துக்காகவும் மடத்தின் செம்மை நிலைக்காகவும் இறுக்குந்துறை முதலிய பல இடங்களில் ஏராளமாகச் சொத்துக்க ளிருக்கின்றன.

திருமடம் பண்டாரக்கட்டு, பூசைக்கட்டு, கொலுமண்டபம் முதலிய பல பெரிய மண்டபங்களோடு பல நூற்றுக் கணக்கான பேர் ஒருங்கிருந்து உண்ணும் இடமுடையதாகப் பொலிகின்றது. ஐந்நூறு பேருக்கு ஒரேகடவையிற் சோறு சமைக்கும் மிகப்பெரிய வெண்கல உருளியொன்று இங்கிருந்தது இப்போது ஐந்தாண்டுகளின்முன் ரூபாய் இருநூற்றைம்பது வழிச்செலவில் தருமபுரத்திற் கொண்டுபோய் வைக்கப்பெற்றிருக்கிறது. இத்திருமடத்தைச் சேர்ந்த பாற்பண்ணையில் இங்கே ஐந்நூறு பசுக்கள் இருந்தமை கண்டு மகிழ்ந்த பெரியார் கூறுகின்றனர். தெற்கு வீட்டார் பாற்பண்ணையிலும் இருநூறு பசுக்கள் இருந்தனவாம்

சாபத்தூர்

செவந்தியப்பர் இருக்கும் இடம்தான் சிவசயிலநாதருடைய திருவிழா நகர மென்று கூறினோம். இது ஆழ்வார் குறிச்சியின் மேற்குப்பகுதி. இதுஇப்போது சாபத்தூரென்று வழங்கி வருகிறது. பண்டைக் காலத்தில் மலையடியிலிருந்து இவ்விடம்வரை கடம்ப வனமாக இருந்தது. அதனால் சிவசயிலநாதர் காடுதாண்டி மக்கள் அன்புடன் குடியிருக்கும்

அன்பூர் வந்து திருவோலக்கக்காட்சி தந்தருள்வாராயினர். அதன்பொருட்டுத்தான் அவர் வந்து தங்கியருளும் இடத்தில் செவந்தியப்பர் கோவில்தோன்றுவதாயிற்று. அக்காலத்தில் ஆழ்வார்குறிச்சியும் ஆம்பூரும் அன்பூர் என்றே பெயர் பூண் டிருந்தன. செவந்தியப்பர் இருக்குமிடத்தில் பண்டு பல தெருக்களோடு கூடிய நகரம் இருந்தது, அது சாபத்தால் அழிந்துவிட்டபடியால் இப்போது சாபத்தூர் எனக் கூறப் பெறுகிறது. சாப வரலாறு கூறுவோம்.

திருத்தேர் பதினோராம்நாள் நடைபெற்று வருகிற தல்லவா? இதனைப் பத்தாம்நாள் நடைபெறுத்தவேண்டு மென்று இருநூறு ஆண்டுகளின் முன்பிருந்தார் பலர் துணி ந்து பத்தாம் திருநாளன்று இழுக்கத் தொடங்குவாராயினர். ஆனால் தேரை அவர்களால் அசைக்கவே முடியவில்லை. அத னால் அவர்கள் உளம் கலங்கித் தேரின் முன்பாகப் படுத்துக் கிடந்தார்கள். பதினோராம் நாள் காலையில் தேர் தானாக ஓடத் தொடங்கி தன்முன்கிடக்கும் மக்களின்மேல் ஏறிப் பலரை நசுக்கி நிலையத்திற்கு வந்து சேர்ந்தது. பதினோராம்நாள் ஓடவேண்டிய தேரைப் பத்தாம் நாளே இழுக்கவேண்டு மென்று முனைந்து நின்ற யாவரும் நசுங்கி மடிந்தனர். அவர்கள் உடலங்கள் தேரின்முன் ஓரிடத்தில் ஒன்றுபோலப் புதைக்கப் பெற்றன. அவ்விடத்தில் ஒரு மண்டபம் தோன்றிற்று; அதிலேதான் இப்போது தேர்ச்சங்கிலிகள் போடப்பெற்றிருக்கின்றன. அதுமுதல் அத்தேர்த் தெருக் களிலிருந்த வீடுகள் பாழாயின; மீந்த மக்கள் வெவ்வேறி டங்களிற் குடியேறிவிட்டனர். இது ஒரு வரலாறு; மற் றொரு வரலாறும் இது பற்றிக்கூறப் பெறுகிறது; அது வருமாறு.

இவ்வூரில் நாச்சியாரம்மாள்என்றஅம்மை யொருத்திக்கு ஒரு மகன். அவள் தன் கணவரோடு மகிழ்ந்து வாழ்ந்திருக்கும் போது சோதிமதித்தைலம் என்ற அருமருந்தை அறிந்தார். பொருள்களின் தன்மைகளை யெல்லாம் சோதித்து மதித்தறியும் மதி நுட்பத்தைத் தரும் தைலம் அது. அதனை முதலாவது உண்பவர் இறப்பர், இரண்டாவது உண்பவர் பித்தராவர், மூன்றாவதுண்பவர் அளவற்ற மதிநுட்பமுடையவராவர். அம்மருந்தைச் செய்து முதலில் அம்மையாரும் இரண்டாவது அவர் கணவரும் மூன்றாவது பையனும் உண்டார்கள். ஆனால் பையன்இறந்துவிட்டான், பெரியவர் பித்தரானார், அம்மை அளவிலா அறிவுடையவராக ஆயினர். அவ்வம்மைமேற் பொறாமை கொண்ட அவ்வூர் அந்தணர் ஒரு பட்டுச் சேலையைப் பரிசளித்துப் பையனது பத்தாம் நாட் சிறப்புக்கு உடுத்தித் தமக்கு உணவு படைக்கச்செய்ய அவ்வுடை நழுவி விட்டது. அதனாற் சினந்த அம்மை சபித்தனராக அவ்வூர் பாழடைந்தது. அம்மைக்குப் பலிபீட மொன்று கட்டி அவ்வூரார் இன்றும் பத்தாண்டுக்கொரு முறை கொண்டாடுகின்றனர். அவ்வம்மை கௌசிக கோத்திரத்தைச் சேர்ந்த சங்கேதி குடும்பத்தினர்; இவ்வூரிலிருந்து வெளியேறிப் போன அவ்வம்மை உறவினர் இன்றும் மைசூரில் இருக்கின்றனர். அவர்கள் எழுதிய வரலாற்று நூலில் இது மிகவிரிவாகச் சொல்லப்பெற்றிருக்கிறது. சாபத்தூர் என்ற பெயர் மாறி இவ்வூர் செவந்திபுரம் என்று வழங்கப் பெறுதல் வேண்டும்.

௯. இலக்கியம்

தலபுராணத்தைத் தவிர புலவர் கடையம் மா. முத்துசாமிப் பிள்ளை பாடிய விண்ணப்பக் கலி வெண்பா என்பது

இருக்கிறது. ஆழ்வார்குறிச்சி இராமநாதன் கவிராயர் பாடிய சிவசயிலப்பள்ளு மிகவும் சிறந்தது. அதில் சிவசயிலக்கோவில் திருப்பணி பற்றியும், நிலச்சொத்துக்கள் பற்றியும் வரும் பின்வரும் பகுதிகள் படித்து இன்புறற்பாலன.

"உத்தமன் தென்னுறை நகராதிபனுமா பூசை
உச்சந்திக் கட்டளை சிவனார்க்கு
அத்தசாமக் கட்டளை இவை மூன்றும் நடத்துதுரை
அழகப்பன் வாழவே கூவாய் குயிலே."

"சாலையின் மண்டபம் சிவசயிலர் சன்னதி மண்டபம் நாளும்
தழைத்த தெப்பக்குளத்தோ டக்கிராரம்
சீலமுடன் மகிழ்ந்து கட்டுமாறையழகப்பனெனுந்
தெய்வேந்திரன் தழைத்தோங்கக்கூவாய் குயிலே."

"நாட்டுக்கணக்கெழுதும் சூரிய தேவனெனுந்தன்மவான்
நன்மைபெற்று வாழவே கூவாய் குயிலே
பாட்டுக் கணக்கறியா ராமநாதன் கவிராயன் மொழிப்
பட்பிரபந்தம் வாழவே கூவாய் குயிலே."

'பண்ணையாளிடையன் முகம் நோக்கிச்சயிலேசர்
பத்து வயல்களுக்கு வகை சொல்லுவான்
கண்ணார் விளைவு தும்பைமேடும் சாமி திருச்
சன்னதி வட்டமும் அழகற்கரையும்
எண்ணிலாப் புரவர சப்பத்தும் குறுவைப்பத்தும்
இருளிவட்டத்துடன் மற்றுள்ளவயலும்
அண்ணன்மார் இடையரையும் கூட்டியுர மேற்றென்
றனுப்பக் குடும்பனும் வயலுக்குள் நடந்தான்."

வித்து வகை

"சீரகச் சம்பா முள்ளுச் சம்பா நற்
சிறுவெள்ளை பெரு வெள்ளை செஞ்சம்பா

பாரில் மெய்ப்புறு செம்பாளை நம்பிச்
சம்பா சொக்கன் சம்பாகாடைக் கழுத்தான்

நேர்மை சேராணைக் கொம்பன் மிளகி
நிறைபொலி மலைமுண்டன் குறுவை

சேரிலே இருபூவும் விரைவித்து
சேர்த்திட்டேன் வந்து பார்த்திராண்டே."

ய. முடிவுரை.

அன்பூரில் விறகு வணிகராக இருந்த பெரிய சாத்தாப் பிள்ளை குட்டிச்சாத்தாப்பிள்ளை என்பவருக்குக் கனவிற் சொல்லி ஐந்து தங்கக் கடாரங்களைப் புதையலாகக்கொடுத்து அவர்கள் வழியே கோவிலின் திருப்பணிகள் நடைபெறு மாறு செய்தார் பெருமான் என்பது வரன்முறைப் பேச்சு. இங்கே தருமபுர ஆதீனச் சின்னப்பட்டமாக எழுந்தருளி யிருந்த தெய்வத்திரு அருணைத்தி தேசிகமூர்த்திகள் இவ் வூரைவிட்டுக் கவலையுடன் பிரிந்து சென்றமையால் ஊருக்கு வாழ்வு வரும்பொருட்டு அக் குருமூர்த்திகளை நினைந்து இப் போது இவ்வூரார் 1942-லிருந்து ஆவணித் திங்கள் பூரணை க்கு முந்தினநாள் வழிபாடும் மாகேசுரபூசையும் நடத்துகின் றார்கள். இது உயர்திரு சத்திதாசன் அவர்கள் இங்கெழுந் தருளிய பின்னரே நடைபெறுகிறது.

இதற்கு முன் குடமுழுக்கு நடைபெற்று அறுபத்தேழு ஆண்டுகள் ஆகின்றன. அவ்வேளை திருக்கோவிலின் வடக்குத்திருமதில் சரிந்திருந்ததாக அப்போது சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த தேசிகமூர்த்திகள் அடிக்கல் நாட்டி அதனைக் கட்டித் தந்தருளினார்கள் அதற்கிடையில் பெரியபட்டமாகித் தருமபுரம் செல்லநேர்ந்தும். ஞானபீடமாகஉள்ள இவ்விடத்தில் தமிழும் சைவமும் தழைத்தோங்கும் பெரிய கல்லூரி ஒன்று அமைதல் வேண்டும். சின்னப்பட்டமாகத் தேசிக மூர்த்திகள் இங்கே எருந்தருளியிருந்து அடியாருக்கு அருள்புரிதல் வேண்டும். மேலேகண்ட பெரிய தருமங்களெல்லாம் இப்போது தருமபுரத்தில் குருமூர்த்தமாக எழுந்தருளியிருக்கும் தெய்வத்திரு தேசிகமூர்த்திகள் சண்முக தேசிக ஞானசம்பந்த பண்டார சந்நதி அவர்கள் சிறிது கடைக்கண் பார்த்தருளினால் மிக எளிதிற் கைகூடுவனவாகும். சிவசயிலநாதர் திருவருள் ஓங்குக.

கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.




கணேசன் அச்சுக்கூடம், திருநெல்வேலிப் பாலம் — 1944.

பட விளக்கம்.

1. பிள்ளையார்
2. நெல்வேலி நாதர்
3. தட்டோட்டிக்குப் போகும் வழி
4. கோபுரவாயில்
5. மீனாட்சிசுந்தரேசுரர்
6. முருகன்
7. வடக்குவாசல்
8. சண்டேசுரர்
9. சனி
10. அன்னபூரணி
11. திருமகள்
12. சூரதேவர்
13. துர்க்கை
14. வயிரவர்
15. ஞாயிறு
16. விசுவநாதர், விசாலாட்சி, கண்ணபிரான்.
17. வெண்மதி
18. தெற்கணாமூர்த்தி
19. மடைப்பள்ளி
20. பள்ளியறை
21. எழுகன்னியர்
22. மாலைக்கட்டு
23. அடியார்
24. கொடிமரம்
25. நந்தி
26. பலிபீடம்

அ. கருப்பக்கிரகம்
ஆ. அர்த்த மண்டபம்
இ. மாமண்டபம்
ஈ. மணி மண்டபம்

சிவசயிலநாதர் திருக்கோவில்



கருணையாற்றின் கரைமேல் தருமபுரம் திருமடம்.